**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : STC 586/2021**

**Prosecution witness : அ.சா. 7** **Date : 15.11.2023**

| | |
|---|---|
| **Name : பழனிச்சாமி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது தீவட்டிபட்டி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.12.2019–ம் தேதி ஜலகண்டாபுரம் காவல்நிலையத்தில் நான் நிலையப்பொறுப்பில் இருந்தபோது, ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனையில் இருந்தது கிடைக்கப் பெற்ற காயத்தகவலின் பேரில் எனது உத்தரவின் பேரில் முதல் நிலைக்காவலர் திரு.முத்துகுமரன் 1591 என்பவர், மேற்படி மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த நாகலட்சுமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, என் வசம் ஒப்படைத்தார். அதை நான் பரிசீலனை செய்து புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப **நி.கு.எண்.256/2019 u/Sec. 294(பி), 323 IPC** ஆக வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ 4** ஆகும்.

3. பிறகு புலன் விசாரணை அதிகாரி என்ற முறையில் கடந்த 18.12.2019– ம் தேதி மாலை 4 மணிக்கு சம்பவ இடம் ஜலகண்டாபுரம் ஆட்டுக்காரன் வளவு பிளாட் அருகே சென்று சாட்சிகள் செல்வி மற்றும் கவிதா ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார். பார்வை மகஜர் மற்றும் வரைபடம் **அ.சா.ஆ 5** மற்றும் **அ.சா.ஆ 6** ஆகும்.

4. பின்பு சாட்சிகள் ராஜா, நாகலட்சுமி, வெற்றிவேல், கவிதா, செல்வி

ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். இவ்வழக்கில் காயமடைந்த நாகலட்சுமி என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ரேவதி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேடு பெற்றார். விபத்து பதிவேடு **அ.சா.ஆ.7** ஆகும்.

5. இவ்வழக்கின் எதிரி கடந்த 20.12.2019 ம் தேதி 15.00 மணிக்கு ஆட்டுகாரன் வளவு வழக்கில் சம்மந்தப்பட்ட பிளாட்டில் வைத்து கைது செய்யப்பட்டு பிறகு நிலையப்பிணையில் விடுவிக்கப்பட்டார்.

6. இவ்வழக்கின் புலன் விசாரணையில் எதிரிகள் மீதான குற்றம் உண்மை எனத் தெரிய வந்ததால் எதிரி மீது கடந்த 10.06.2020 ம் தேதி **நி.கு.எண்.256/2019 u/Sec. 294(பி), 323 IPC** ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**